



செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோவிலில் T25சிங்கபெருமாள் கோயில் காவல் நிலையத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், துணை காவல் ஆணையர் மகேஸ்வரி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன், ஒன்றிய செயலாளர்கள் ஆப்பூர் ப. சந்தானம், கே.பி.ராஜன் மற்றும் காவல் துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் கவரப்பேட்டையில் கிளை அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் ஒன்றிய செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வே.ஆனந்த் குமார் முன்னிலை நடைபெற்றது இதில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி ராஜா ஆகியோர் நேர்காணலை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள் அருகில் நிர்வாகிகள் மு.பகலவன், மு. கதிரவன், வெ.அண்புவானன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் சுரேஷ், ராஜேஷ், அந்தோணி, அசோக், உதயவாணன் உள்பட பலர் உள்ளனர்.

### ‘என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி’ என்ற முழுக்கத்தோடு

# 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் கழக ஆட்சி அமைந்திட பாடுபட வேண்டும்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் - வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் சிறப்புரை!

*திருவள்ளூர் நவ. 04;*

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக ஆலோசனை கூட்டம் மாவட்ட அவை தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, தொகுதி பார்வையாளர் சுரேஷ் செல்வராஜ், மாவட்ட மாநில நிர்வாகிகள் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின் , பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, வெங்கடாஜலபதி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்

அப்போது பேசியதாவது, திமுக தலைவர் அறிவிப்பின் படி என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் உள்ள 68 ஆயிரம் வாக்கு சாவடிக்களிலும் இலக்கு நிர்ணயித்து வெற்றி பெறுவதே இந்த திட்டத்தின் நோக்கம் ஆகும். எஸ்ஐஆர் எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப்பட்டியலுக்கு வாக்கு சாவடி அளவில் தயார் படுத்தி விவரங்களை சேகரிக்க வேண்டும்.

வரும் டிசம்பர் 10 ம் தேதி வரை பாகம் வாரியாக கூட்டம் நடத்தி அனைவரையும் கட்டாயம் இந்த கூட்டத்திற்கு அழைக்க வேண்டும். 2021 சட்டமன்ற தேர்தலில் ஒரு பாகத்தில் 500 வாக்குகள் பெற்றிருப்பின் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் கூடுதலாக 70 வாக்குகள் பெற்று 570 வாக்குகளாக நிர்ணயித்து செயல்பட வேண்டும். 2026 தேர்தல் நாள் வரைக்கும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் கூடுதல் கவனம் செலுத்தி வெற்றியை உறுதி செய்திட வேண்டும். இந்த வாக்கு சாவடிகளில் ஓரணியில் தமிழ்நாடு எங்கிற திட்டத்தின் மூலம் இணைந்தவர்கள் உள்ளிட்ட குறைந்தது 100 பேர்களை அழைத்து தெருமுனை கூட்டம் நடத்திட வேண்டும்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு புதிய வாட்ஸ்அப் குழுவை வாக்குச்சாவடிக்கான பிடிஏ உருவாக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று குடும்ப உறுப்பினர்கள் விவரங்களை குறித்துக் கொள்ள வேண்டும். அரசின் சாதனைகளை விளக்கும் துண்டு அறிக்கையை கொடுத்து வீட்டில் உள்ள அரசு திட்டங்களின் பயனாளிகள் விவரம் மற்றும் தேவைகள் ஏதேனும் இருப்பின் அதனை குறித்துக் கொள்ள வேண்டும். 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது, இறந்தவர்களை பட்டியலில் இருந்து நீக்குவது மற்றும் முகவரி மாற்றம் செய்து வந்தவர்களை சேர்ப்பது இங்கிருந்து சென்றவர்களை நீக்குவது போன்ற செயல்களிலும் கவனமாக செயல்பட வேண்டும்.

தகுதியுள்ள எந்த வாக்காளர் பெயரும் வாக்காளர் பட்டியலில் விடுபடாமல் பார்த்துக் கொள்வதும், தகுதியற்ற எந்த ஒரு நபரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று விடாமல் பார்த்துக் கொள்வதும், அடுத்த ஒரு மாதத்திற்கு எனது இலக்கு என்று செயல்பட வேண்டும்.

என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி’ எனும் திராவிட கொள்கைக்கான வெற்றி முழுக்கத்தோடு 2026 சட்டமன்ற தேர்தலில் அயராது உழைத்து, ஏழாவது முறையாக கழக தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கழக ஆட்சி அமைந்திட உறுதியேற்போம்.! என எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தெரிவித்தார் நிகழ்ச்சியில் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், மு.மணி பாலன், நா.பரிமளம், ஜான்பொன்னுசாமி, ஆ.ராஜா, ஏ.ஆர்.டி.உதயசூரியன், கி.ஆனந்த் குமார், மு.முரளிதரன், ரவிக்குமார், அபிராமி குமரவேல், பி.முத்து, க.சு.தமிழ் உதயன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ், நிர்வாகம் ரவிக்குமார், முகமது அலவி, ஓட்டுனர் அணி ராஜேஷ், கோபி உள்பட பலர் கலந்து கொண்டார்கள்

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை! தலைமை பொதுக்குழு உறுப்பினர்

# மேடவாக்கம் ப.ரவி திருவுருவப் படம் : துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து நல உதவிகள் வழங்குகிறார்!

## அமைச்சர் துரைமுருகன் - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி - எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, நவ. 04

சென்னை தெற்கு மாவட்டம், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், புனித தோமையார்மலை முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழு உறுப்பினர், மேடவாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மேடவாக்கம் ப.ரவி திருவுருவப் படத்திறப்பு மற்றும் நினைவாஞ்சலி நிகழ்வு 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (04.11.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு, மேடவாக்கம், பிள்ளையார் கோயில் தெருவில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை வகிக்கிறார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழக கொள்கை பரப்புச் செயலாளர், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியச் செயலாளர் ஜி.வெங்கடேசன், புனித தோமையார் மலை ஒன்றியப் பெருந்தலைவர் எஸ்.சங்கீதா பாரதி ராஜன் ஆகியோர் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்டக் கழக நிர்வாகிகள், மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் மேடவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் சிவபூஷணம் ரவி, புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ்.லோகேஸ்வரா ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.


